முருகப்பெருமான் துணை

**மகான் பட்டினத்தார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.05.2022**, புதன்கிழமை

1. பூவுலகை காக்கும் சக்தியாக
பிரணவக் குடில் படைத்தநல்
அவதார ஆறுமுக அரங்கா
அண்ணலே உன் பெருமை கூறி

2. கூறியே சுபகிருது தகர் திங்கள்
குறைவிலா எழுநான்குதிகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 28 ம் நாள் 11.05.2022, புதன்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு பட்டினத்தார் யானும்

3. யானும் உலகோர் பண்புற உரைப்பேன்
உடல் பொருள் உயிர் ஆஸ்தி
தானெனப் பெரிதாக எண்ணி
தன்னலம்பட வாழும் மானிடா கேள்

4. கேளுமே உறவு பணபலமென
கொள்கை கொண்டு வாழும் மானிடா
கேளுமே அனைத்தும் மாயை
கூடும் குறையும் வினைவழியே

5. வினைமாற்றி சமன் செய்ய
வீணான மாயை வழி வென்று
இணையிலா ஞான வழியை ஏற்க
என்றும் நிலைத்திடுவாய் எனும்

6. எனும் அறிவுகிட்ட மானிடா
இதுவரை உழன்றுள மாயை வழி
கணப்பொழுதில் விட்டு இனிமேல்
காப்பாய் என வேண்டிவர

7. வருகவேணும் பிரம்ம சூட்சும
வள்ளல் அரங்கன் திருவடியை
முருகா என சரணடைவு காண
முழுவதுமாக மாயை கடந்து

8. கடந்து சுய நலம் விட்டு
கடைத்தேற்றும் உயர் வழியாம்
தடையற அரங்கன் மார்க்க
தயவெனும் சன்மார்க்கம் ஏற்று

9. ஏற்று செயல்பாடு கண்டிட
எல்லாப் பொறி புலனுமே
பற்று நீக்கி பண்புகள் கூடி
பரிபக்குவம் நிலை பெற்றுமே

10. பெற்றுமே ஞான வாழ்வை
பின்பற்றி தொடர்ந்து வந்து
உற்றதொரு சூட்சும சக்திகள்
உலகினில் அரங்கன் வழி அடைந்து

11. அடைந்து தேறி மீள்வர்
அழியாமை வரம் கிட்டியே
இடரை வென்று இனி பிறவா
இயம்பிடுவேன் ஆற்றல் பெறுவர் அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப் பெருமான் திருவடிகள் போற்றி

# சன்மார்க்கத்தால் வரும் நன்மைகள்

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு.**

**– திருக்குறள் – குறள் எண் 231.**

உடல் ஆக்கத்திற்காக மனிதன் பல்வேறு உணவு பொருட்களை தனது தகுதிக்கேற்றவாறு உண்டு மகிழ்கிறான். ஆனால் தனது உயிர் (ஆன்மா) ஆக்கத்திற்காக எதையும் உணர்ந்து செய்வதில்லை.

உயிர்க்கு ஆக்கம் தருவது பக்தியும் புண்ணியமும் மட்டும் தான். மகான் முருகப் பெருமான் திருவடிகளை பூசிப்பது ஒன்றே பக்தியாகும். பசித்த ஏழைகளுக்கு உணவளிப்பது புண்ணிய செயலாகும்.

ஆன்மா கீழ்கண்ட செயல்களால் மாசடைகிறது

– மது (கள்)அருந்துதல்
– புலால் உண்ணுதல்
– விலை மகளுடன் தொடர்பு
– சூது விளையாடுதல்.

மேலும் குணக்கேடுகளான

– அழுக்காறு – பொறாமை
– அவா – பேராசை
– வெகுளி – காரணமில்லாமல் கோபங் கொள்ளுதல்
– இன்னாசொல் – பிறர் மனம் புண்படும்படி பேசுதல்.

போன்றவைகளாலும் ஆன்மா மாசுபடுகிறது. இதைதான் மகான் வள்ளுவப் பெருமான்,

**அழுக்காறு அவாவெகுளி இன்னாசொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்.**

**– திருக்குறள் – குறள் எண் 35.**

என்று குறிப்பிட்டுள்ளார்கள். திருக்குறளில் உள்ள அறம், பொருள், இன்பத்தில் வீடுபேறாகிய ஞானமும் அமைந்துள்ளது.

இந்த குணக்கேடுகள் நீங்கி வாழ விரும்புகின்றவர்கள் குணக்கடலாகவும் பண்பின் சிகரமாகவும் உள்ள மகான் முருகப் பெருமான் ஆசியைப் பெற வேண்டும். மகான் முருகப் பெருமான் ஆசியில்லாமல் குணக்கேடுகளை உணர முடியாது. ஆன்மாவிற்கு ஆக்கம் தேடிக் கொள்ளமுடியாது. மேலும் ஞானமும் சித்திக்காது.

இல்லறத்தார்களுக்கு உடல் ஆக்கமும் வேண்டும். உயிர் ஆக்கமும் வேண்டும். இல்லறத்தார்களின் கடமையே தன்னை சார்ந்த தாய். தந்தை, மனைவி, மக்கள், உடன் பிறந்தோர், சுற்றத்தார் போன்றவர்களை பாதுகாத்தும், வரும் விருந்தினரை உபசரித்தும் வருவதே ஆகும். இதுவே இகவாழ்வாகும். இகவாழ்வாகிய உலக நடை வாழ்வே இல்லறமாகும்.

மேலும், இல்லறத்தார் பசித்த ஏழைகளுக்கு உணவளித்து, உயிர் கொலை தவிர்த்து, புலால் உணவினை மறுத்து சுத்த சைவ உணவினை மேற்கொண்டு உலக ஞானத் தலைவன் ஞானபண்டிதன் முருகப் பெருமான் திருவடிகளைப் பூசிப்பது பரவாழ்வைத் தரும்.

இகவாழ்விற்கு துணை தாய், தந்தை, மனைவி, மக்கள் மற்றும் சுற்றத்தார்.

பரவாழ்விற்கு துணை முருகப் பெருமானின் திருவடிகள்.

ஆன்ம ஆக்கத்திற்கு துணை இகவாழ்வும் பரவாழ்வும்.

தவத்திற்கு அடிப்படையே ஆன்மாவின் ஆக்கம்தான்.

நித்தியமான உயிரையும் அநித்தியமான உடம்பையும் முருகப் பெருமானின் ஆசியோடு சேர்க்க கற்றுக் கொண்டவர்கள்தான் ஞானிகள். சத்து அசத்தை அறிந்து, அசத்தை நீக்கி சத்தை உறுதிப்படுத்தி கொண்டவர்கள் ஞானிகள்.

முருகப்பெருமானின் ஆசியில்லாமல் சத்து அசத்து வேறுபாட்டை அறிய முடியாது. முருகப்பெருமானின் ஆசியில்லாமல் சத்தினை நிலைப்படுத்திக் கொள்ளவும் முடியாது.

எந்த ஒரு ஞானியும் காட்டிற்கு சென்று தவம் செய்ததில்லை. அனைத்து ஞானிகளும் உலக நடையில் இருந்து கொண்டே தவம் மேற்கொண்டவர்கள்தான். எந்த ஒரு ஞானியும் காட்டிற்கு சென்று தவம் செய்ய வேண்டும் என்றும் சொன்னதில்லை. ஞானிகள் அனைவரும் இகவாழ்விலே இல்லற ஞானியாக இருந்து பின்பு முருகப் பெருமானின் அருளாசியினால் பரவாழ்வு கிடைக்கப்பெற்று ஞானம் அடைந்தவர்களாவார்கள்.

இவ்வாறு இகவாழ்வாகிய இல்லறத்திலும் பரவாழ்வாகிய ஞானத்திலும் வெற்றி கண்டவர் மகான் பட்டினத்தார். பெரும் செல்வந்தராகிய மகான் பட்டினத்தார் மிகப் பெரிய கப்பல் வியாபாரி. கடல் கடந்து வாணிபம் செய்து வந்தவர்.

இகவாழ்விலும் பரவாழ்விலும் வெற்றி பெற பேரறிவு வேண்டும். பேரறிவே பேரின்ப வாழ்வைத் தரும். பேரறிவைப் பெற முருகப் பெருமான் ஆசி வேண்டும். முருகப் பெருமானின் திருவடியே வேதமாகும். “முருகா” என்ற நாமமே மந்திரமாகும். உலக நன்மைக்காக தமிழகத்தில் அவதரித்த மகான் முருகப்பெருமானை பூசித்து ஆசி பெறுவதே, தமிழர்களின் பண்பாகும். முருகப்பெருமானின் ஆசியை பெறுவதே சிறப்பறிவான பேரறிவாகும்.

**அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய்ஒன்றாய்ப்**
**பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக்**
**கருணைகூர் முகங்களாறும் கரங்கள்பன்னிரண்டுங் கொண்டே**
**ஒருதிருமுருகன் வந்துஆங்கு உதித்தனன் உலகமுய்ய.**

**– மகான் கச்சியப்பவள்ளல் – கந்தபுராணம் – திருஅவதாரப்படலம்.**

இவ்வாறு உலக நன்மைக்காகவே அவதரித்த முருகப்பெருமானின் பரிபூரண ஆசியை தன் பக்தியின் மூலமும், தான் செய்த புண்ணியத்தின் மூலமும் பேரறிவைப் பெற்று, பேரின்ப வாழ்வான ஞானவாழ்வை அடைந்தவர் மகான் பட்டினத்தார்.

அனைத்து ஞானிகளும் இந்த உபாயத்தை அறிந்தவர்களே. உண்மைப் பொருளாகிய மெய்பொருள் அறிந்தவர்கள்தான் ஞானிகள். இதை அறிந்த மகான் பட்டினத்தார்,

**நாட்டமென் றேயிரு சற்குரு பாதத்தை நம்புபொம்ம**
**லாட்டமென் றேயிரு பொல்லா வுடலை அடர்ந்தசந்தைக்**
**கூட்டமென்றேயிரு சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீர்**
**ஓட்டமென் றேயிரு நெஞ்சே உனக்குப தேசமிதே.**

**– மகான் பட்டினத்தார் – பொது – கவி எண் 21.**

தனது மனதிற்கு தானே உபதேசம் செய்யும் வகையில் கூறியுள்ளார். சற்குரு என்று குறிப்பிட்டுள்ளது உலக குருநாதர் என்று போற்றப்படும் முருகப் பெருமானைத்தான்.

மேலும்,

**அத்தமும் வாழ்வும் அகத்துமட் டேவிழி அம்பொழுக**
**மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு**
**கைத்தலை மேல்வைத் தழுமைந் தருஞ்சுடு காடுமட்டே**
**பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே.**

**– மகான் பட்டினத்தார் – பொது – கவி எண் 13.**

**மனையாளும் மக்களும் வாழ்வுந் தனமுந் தன்வாயில்மட்டே**
**இனமான சுற்றம் மயான மட்டே வழிக் கேதுதுணை**
**தினையாம் அளவெள் ளளவா கினுமுன்பு செய்ததவந்**
**தனையாள என்றும் பரலோகஞ் சித்திக்கும் சத்தியமே.**

**– மகான் பட்டினத்தார் பாடல், பொது 12.**

மேற்குறிப்பிட்டுள்ள கவியில் ‘‘வழிக்கு ஏது துணை ?’’ என வினா எழுப்பி அதற்கான உபாயத்தையும் கூறுகிறார் மகான் பட்டினத்தார். முன்பு செய்த தவம் என்பதே உண்மைப் பொருள் அறிந்தவர் செய்யும் தவமே. உண்மைப் பொருள் அறிந்தவர் சிறிதளவாயினும் செய்யும் தவம் அவர்களுக்கு ஞானப் பாதையைக் காட்டும். சிறிதளவு என்பதை குறிப்பிடும் வகையில் தானியங்களில் சிறிதாகிய தினை மற்றும் எள் போன்றவற்றை எடுத்துக்காட்டாக குறிப்பிடுகிறார் மகான் பட்டினத்தார்.

**திருவும்மெய்ப் பொருளுஞ் செல்வமும் எனக்குன்**
**சீருடைக் கழல்கள்என் றெண்ணி**
**ஒருவரை மதியா துறாமைகள் செய்தும்**
**ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்**
**முருகமர் சோலை சூழ்திரு முல்லை**
**வாயிலாய் வாயினால் உன்னைப்**
**பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்**
**பாசுப தாபரஞ் சுடரே.**

**– மகான் திருஞானசம்பந்தர் – வடதிருமுல்லைவாயில் – கவி எண் 1.**

மகான் திருஞானசம்பந்தர் இங்கே மெய்ப்பொருள் என குறிப்பிடுவது முருகப்பெருமானின் திருவடிகளைத்தான்.

‘‘உண்மைப் பொருள் என்பதே முருகப் பெருமானின் திருவடிகள் தான்’’

முருகப்பெருமானின் திருவடிகளே வழிக்கு துணையாக வரும். சேர்த்து வைத்த செல்வங்களோ, மனைவி மக்களோ வர மாட்டார்கள். முருகப் பெருமான் திருவடிகளை ‘‘ஓம் சரவண ஜோதியே நமோ நம’’ என்றும் ‘‘ஓம் முருகப் பெருமான் திருவடிகள் போற்றி’’ என பூசித்து வருபவர்களுக்கு ஞான பண்டிதன் திருவடிகளே ஜென்மத்தை கடைத்தேற்றவும் ஞான வழிக்கு தான் எடுத்துள்ள பிறவியை பயன்படுத்தவும் துணையாக கூடவே வரும் என்பது சத்திய வாக்கு.

எந்தை பட்டினத்தார் இணையடி போற்றிட
சிந்தையும் தெளிய சிவமது ஆவாரே.

பற்றற்ற பட்டினத்தார் பதமலர் போற்றிட
நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்.

ஆற்றலாம் பட்டினத்தார் அருளினைப் போற்றிட
ஏற்றமே வாழ்வில் இன்பம் உண்டாம்.

பட்டினத்தார் பதமலர் போற்றிட
எட்டும் இரண்டும் எனக்கே சித்தியே.

சித்தியாம் பட்டினத்தார் திருவடி போற்றிட
முத்தியும் உண்டாம் சுழிமுனையும் திறக்குமே.

நாட்டமாம் வேலனை நாளும் போற்றிட
வாட்டமும் இல்லை மனமும் செம்மையே.

அருளாளன் அருணகிரி அருளினைப் போற்றிட
இருளெல்லாம் விலகி வாழ்வில் இன்பம் உண்டாம்.

முக்காலம் உணர்ந்த முனிவராம் பட்டினத்தார்
தக்கதோர் துணையென்றே சாற்றுவார் நல்லோர்.

தக்கதோர் சென்னையில் தானெழுந்தே அருளும்
பக்குவமிக்கதோர் பட்டினத்து அடிகளே.

அன்னையாம் சென்னைநகர் அனைவருக்கும் தாயானாள்
என்னையும் காத்து எனக்கருள் செய்தாளே!

– முருகனடிமை ஆறுமுக அரங்கமகா தேசிகர்.